# Thiruvilayadal Puranam – திருவிளையாடற்புராணம்

திருவிளையாடல் புராணம் என்பது சிவபெருமானது திருவிளையாடல்களைக் கூறும் பரஞ்சோதி முனிவர் எழுதிய நூல் ஆகும். சிவபெருமான் தன்னுடைய அடியார்கள் மீதும் , சிற்றுயிர்கள் மீதும் கொண்ட அன்பினால் தாமே பூலோகத்திற்கு வந்து செய்த திருவிளையாடல்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

## ஆசிரியர் குறிப்பு

பரஞ்சோதி முனிவர் திருமறைக்காடு (வேதாரணியம்) எனும் ஊரில் மீனாட்சி சுந்தர தேசிகர் என்பவருக்கு மகனாகப் பிறந்தவர். மதுரையில் சற்குருவை ஏற்று சைவ சந்நியாசம் பெற்றார். மதுரை மீனாட்சியம்மை பராசக்தி பரஞ்சோதி முனிவரின் கனவில் தோன்றிச் சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பாடும் படி கூறியமையால் இந்நூலைப் பரஞ்சோதியார் இயற்றியதாக நம்பப்படுகிறது. இவர் இயற்றிய வேறுநூல்கள்:
1)திருவிளையாடற்போற்றிக் கலிவெண்பா 2)மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி
3)வேதாரணிய புராணம்
இவரது காலம்:கி.பி.16-ஆம் நூற்றாண்டு என்பர்.

## நூல் அமைப்பு

மதுரையில் சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் பற்றி ஹாலாஸ்ய மகாத்மியம் என்னும் வடமொழி நூலில் சொல்லப்பட்டுள்ளது. வியாசர் இயற்றிய ஸ்கந்த புராணத்தில் இந்த லீலைகள் சொல்லப்பட்டுள்ளன. நந்தி தேவர் சனத்குமார முனிவருக்கு இந்த லீலைகள் பற்றிச் சொன்னார் என்றும் , அதை வியாசருக்குச் சனத்குமாரர் சொன்னார் என்றும் , வியாசர் அதை ஸ்கந்தபுராணத்தில் எழுதினார் என்றும் வழங்கப்படுகிறது.

ஹாலாஸ்ய மகாத்மியத்தைப் பரஞ்சோதி முனிவர் தமிழில் மொழி பெயர்த்தார். அதை அப்படியே மொழி பெயர்க்காமல் , தமிழுக்கே உரித்தான செய்யுள் நடையில் 3363 செய்யுள்களாக வடித்தார். இதில் முதல் 343 செய்யுள்கள்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

காப்பு, மதுரை நகர சிறப்பு உள்ளிட்டவற்றை உள்ளடக்கியது. 344-ஆவது செய்யுள் முதல் தான் பெருமானின் திருவிளையாடல் தொடங்குகிறது.

திருவிளையாடல் புராணம் மூன்று காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன,.
மதுரைக்காண்டம் - 18 படலங்கள் கூடற்காண்டம் - 30 படலங்கள் திருவாலவாய்க் காண்டம் - 16 படலங்கள்

- புராணம் – பழைய வரலாறு மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் . கடவுள் செய்தருளிய அறுபத்து நான்குதிருவிளையாடல்களை விளக்கிக் கூறும் பழைய வரலாற்ற நூல் திருவிளையாடற் புராணம்.
- மதுரைக் காண்டத்தில் 18 படலங்களும், கூடற்காண்டத்தில் 30 படலங்களும், திருவாலவாய்க் காண்டத்தில் 16 படலங்களும் அமைந்துள்ளன.
- இந்நூல் 3363 பாடல்களை கொண்டுள்ளது பெரிய புராணத்திற்கு . அடுத்ததாகப் பெருமை பெற்று விளங்குவது இந்நூல் . கி .பி.13ஆம் நூற்றாண்டில் புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தையும் , வடமொழி நூலாகிய "ஆலாசிய மாகாத்துமியம்" என்னும் நூலையும் தழுவி எழுதப்பட்டது என்பர் .3 காண்டம், 64 படலம், 3363 பாடல்கள்
- தொடை நயமும் , பக்திச்சுவையும் மிக்க இந்நூலுக்கு ந வேங்கடசாமி .மு. நாட்டார் உரையெழுதியுள்ளார்

## மேற்கோள்கள்

| |
|---|
| "இரவினீர்ங் குழலும் அற்றோ என அஃதும் என்னா<br>வெருவிலான் சலமே முற்றச் சாதித்தான் விளைவு நோக்கான்" |
| "தன்பால் ஆகிய குற்றம் தேரான்" |
| "ஆய்ந்த நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன் அவனைக் காய்ந்த<br>நாவலன் இம்மெனத் திரவுருக் கரந்தான்". |


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in